இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 19.05.2026

# குதிரை பேரம் - விளக்கம் தேவை!

பெரும்பான்மை கிடைக்காத தனது கட்சியை ஆட்சியில் அமர்த்த - தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள குதிரை பேரம் நடத்தினார் முதலமைச்சர் விஜய் என்பது குற்றச்சாட்டு. இதற்கு முறையான விளக்கத்தை அவர் வாயைத் திறந்து சொல்ல வேண்டும்.

விஜய் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. உடனடியாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவருக்கு ஓடிப் போய் ஆதரவைத் தருகிறார்கள். தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு நாளில் மனம் மாறத் தரப்பட்ட உறுதிமொழி என்ன?

டி.டி.வி. தினகரன் தனது கட்சியின் ஒரு எம்.எல்.ஏ.வைக் காணும் என்றும், எனது கையெழுத்தை அவர் போட்டுள்ளார் என்றும் ஆளுநரிடம் மனு தருகிறார். கிண்டி காவல் நிலையத்திலும் புகார் தருகிறார். 'நான் போகவில்லை' என்று அந்த எம்.எல்.ஏ.வே பேட்டி தருகிறார். பின்னர் அவரே விஜய் ஆதரவாளராக மாறுகிறார். அந்த எம்.எல்.ஏ.வை கட்சியை விட்டு நீக்கிவிட்டார் டி.டி.வி. தினகரன். அப்படியானால் தினகரன் கட்சி எம்.எல்.ஏ.வுக்கு தரப்பட்ட வாக்குறுதி என்ன?

அ.தி.மு.க. என்ற கட்சியே முதலமைச்சர் விஜய் போட்ட தூண்டிலில் இரண்டாகப் பிளவுபட்டு நிற்கிறது. அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பின்னால் 22 உறுப்பினர்கள் நிற்கிறார்கள். விஜய் ஆட்சியை ஆதரிப்பவர்கள் முன்னாள் அமைச்சர் வேலுமணி பின்னால் இருக்கிறார்கள். விஜய் ஆட்சிக்கு ஆதரவாக 25 அ.தி.மு.க. உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். இந்த 25 பேருக்கு தரப்பட்ட ரகசிய வாக்குறுதி என்ன?

**தேர்தலுக்கு முன்னதாக கூட்டணி அமைத்து போட்டியிட்டு கூட்டணி ஆட்சியை அமைப்பதைப் பற்றி பிரச்சினை இல்லை. மேலும்,சில கட்சிகள் தங்களது நிர்வாகக் குழுக் கூட்டங்களை நடத்தி ஆட்சிக்கு ஆதரவு என முடிவெடுத்திருப்பதும் பிரச்சினை இல்லை. மாறாக ஒரு கட்சியை இரண்டாக உடைத்திருப்பது பேரத்தின் அடிப்படையில் தானே? இன்னொரு கட்சி எம்.எல்.ஏ.வைத் தூக்கி இருப்பதும் பேரமாகத் தான் இருக்கும் என்று சந்தேகம் எழுவது இயல்பு தானே?**

'முதலமைச்சரைச் சந்திக்க முகத்தை மூடிக் கொண்டு சென்றது யார்?' என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்க்கு நேராகக் கேள்வி கேட்டார் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த். சபையில் உட்கார்ந்துஇருந்தமுதலமைச்சர்விஜயால்பதில்சொல்லமுடியவில்லை.

**"முகத்தை மூடிக்கொண்டு சென்றவர் யார் என்பதை முதலமைச்சர் விஜய் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு அரசில் எந்தவித குதிரைப்பேர அரசியலும் நடைபெற வில்லை என்பதை முதலமைச்சர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்தவர்கள் நிபந்தனை இல்லாத வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்தனர். அதே போல் அதிமுகவில் இருந்து பிரிந்து வந்தவர்களும் தங்களது ஆதரவை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்,. அப்படி அறிவித்தால் மட்டுமே குதிரை பேரம் நடைபெறவில்லை என்பதை மக்கள் நம்புவார்கள்"** என்று சொல்லி இருக்கிறார் பிரேமலதா விஜயகாந்த். விஜய் கட்சியில் இருந்து இந்த அறிக்கைக்கு இதுவரை பதில் வரவில்லை.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது கட்சியைச் சேர்ந்த 47 உறுப்பினர்களும் இந்த ஆட்சிக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று சொன்ன பிறகும் 25 பேர் ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.இந்த 25 பேரையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி கோரிக்கை வைத்துள்ளார்.

**எடப்பாடி பழனிசாமியின் உத்தரவுக்கு மாறாக வாக்களித்த அதிமுகவினருக்கு அமைச்சர் பதவி அளித்தால் குதிரை பேரம் நடந்துள்ளது என்பது உறுதி ஆகிவிடும். எட்டு பேர் அமைச்சர் ஆகிறார்கள், ஏழு கேட்கிறார்கள், ஆறு தரப்போகிறார்கள் என்று வரும் செய்தி அனைத்தும் பேரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 'அமைச்சர் பதவி தருகிறோம், வாரியத் தலைவர் பதவி தருகிறோம் என்று ஆசை வார்த்தை காட்டப்படுவதாக' சட்டமன்றத்திலேயே எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி இருக்கிறார். இது அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது.**

குதிரை பேரம் நடந்திருப்பதாக தகவல் வருகிறது என்று எடப்பாடி பழனிசாமி பேட்டி அளித்துள்ளார். குதிரை பேரம் நடத்தியதாக டி.டி.வி. தினகரனும் சொல்லி இருக்கிறார்.

**மே 10 ஆம் தேதி அன்று முதலமைச்சராக விஜய் உள்பட 10 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அமைச்சர்கள் பொறுப்பேற்ற ஒரு மணி நேரத்தில் துறைகள் ஒதுக்கீடு செய்யப்படும். ஆனால் இந்த 10 பேருக்குமான துறைகள் 16 ஆம் தேதி தான் வந்துள்ளது. இன்னும் 20 -23 பேரை அமைச்சர்கள் ஆக்கலாம். ஒரு வாரமாக மற்ற அமைச்சர்கள் யார் என்பது அறிவிக்கப்படவில்லை. என்ன காரணம்? பெரும்பான்மை இருந்திருந்தால் சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சர்களாக அறிவிக்கலாம். ஆனால் பேரத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டவர்களை அமைச்சர்கள் ஆக்க வேண்டும் என்பதால் இழுபறி தொடர்கிறது. பேரம் படியாமல் இருக்கிறது என்பதற்கு இதுவே சாட்சி ஆகும்.**

"குதிரை பேர விவகாரத்தில் தகுந்த ஆதாரங்கள் இருந்தால் முதலமைச்சர் விஜய் மீது வழக்குப் பதிவு செய்யப்படலாம்" என்று முன்னாள் சபாநாயகர் அப்பாவு சொல்லி இருக்கிறார். "நாடாளுமன்றத்தில் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற குதிரை பேரம் மூலம் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்களின் ஆதரவை குறுக்கு வழியில் பெற்றனர். அன்றைய பிரதமர் நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்ததைப் போல இன்றைய முதலமைச்சர் விஜய் மீது வழக்குப் பதியப்படலாம்" என்று அ.தி.மு.க. எம்.பி.யான இன்பதுரை சொல்லி இருக்கிறார்.

**பணம், பதவி, சலுகைகள் கொடுத்து தங்கள் பக்கம் இழுக்கும் சட்டவிரோத நடவடிக்கையைத் தான் குதிரை பேரம் என்கிறோம். விஜய் தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள இது போன்ற அஸ்திரங்களை ஏவி இருக்கிறார் என்பதை பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டாக வைத்து வருகிறார்கள்.**

**குதிரை பேரம் குறித்து முதலமைச்சர் விஜயோ, த.வெ.க.வோ உடனடியாக முறையான விளக்கத்தை வெளியிட வேண்டும்.**




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வண்ணார்பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கி உரையாற்றினார்.உடன் மாவட்ட அவைத்தலைவர் முருகன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலைராஜா,மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ் ஆகியோர் உளளனர்.

## அமைச்சர் பொறுப்பு இல்லையென்றாலும்

# தொகுதியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடுபடுவேன்!

## திருவண்ணாமலை மாநகரில் வீதி, வீதியாக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு நன்றி தெரிவித்தார்!

திருவண்ணாமலை, மே 19 -

அமைச்சர் பொறுப்பு இல்லையென்றாலும், சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து தொகுதியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடுவேன் என்று திருவண்ணாமலை மாநகரில் வீதி, வீதியாக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து பேசும்போது குறிப்பிட்டார்.

15.05.2026 வெள்ளி மாலை 5.00மணிக்கு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்டு, வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை மாநகராட்சியில் வீதி, வீதியாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 5.00மணிக்கு திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில் அருகிலிருந்து பொது மக்களுக்கு நன்றி தெரிவித்து, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கடலைக் கடை சந்திப்பு, திருவூடல் தெரு, திருமஞ்ச கோபுரத் தெரு, மணலூர் பேட்டை சாலை, கோரி மேட்டுத் தெரு, தண்டராம்பட்டு சாலை, தேனிமலை, தாமரை நகர், செங்கம் சாலை, வ.உ.சி நகர், பேகோபுரத் தெரு, பெரியத் தெரு, சின்னக்கடைத் தெரு, போளூர் சாலை, பெரியார் சிலை, தியாகி அண்ணாமலை நகர், கார் கானாத் தெரு, கட்ட பொம்மன் தெரு, இராமலிங்கனார் தெரு, அஜிஸ் காலனி, கீழ்நாத்தூர், வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை, கல் நகர், சமுத்திரம் காலனி ஆகிய பகுதிகளில் வீதி, வீதியாக பொது மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.



முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நன்றி தெரிவித்து பேசியதாவது:

தமிழகத்திற்கு தொடர்ந்து நன்மை செய்திட வேண்டும் என்ற அடிப்படையில் மதச்சார்பற்ற கூட்டணி அமைத்து, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் மக்களை சந்தித்தது. தோழமைக் கட்சிகள் உட்பட கழக முன்னோடிகள், தோழர்கள் சிறப்பாக பணியாற்றினார்கள்.

கடைசி நேரத்தில் பல இடங்களில் வெற்றி வாய்ப்பு கிடைக்காமல் போயிற்று. ஆனால், திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பைப் போற்றி, நன்றியுள்ள திருவண்ணாமலை மக்கள் இங்கே என்னை பெற்றி பெற வைத்திருக்கிறார்கள்.

பலபேர் தற்போதைய வெற்றி குறித்து கணிக்க முடியாமல் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 1957 முதல் 17 தேர்தல்களில் வெற்றி முகம் கண்டிறிருக்கிறது. தமிழகத்தை கழகம் 6முறை ஆண்டிருக்கிறது. நமது ஆட்சியில்தான் தமிழகம் முன்னேற்றிய மாநிலமாக மாறியிருக்கிறது. நமது மாவட்டத்தில் நடைபெற்ற அனைத்து வளர்ச்சிப் பணிகளும் நமது கழக ஆட்சியில்தான் நடைபெற்றது.

இங்கே ஒரு மர்ம அலை வீதியது, சுனாமி போல அழித்துவிட்டுபோனது, ஆனாலும், திருவண்ணாமலையில் உதயசூரியன் தான் உதித்தது. அய்யன் வள்ளுவன் இடுக்கன் வருங்கால் நகுக என்று குறிப்பிட்டார். நமது திருநருக்கு, ஏன் தொகுதிக்கு பல வளர்ச்சிப்பணிகள் நடைபெற்றுள்ளது. அமைச்சர் பொறுப்பு இல்லையென்றாலும் தொடர்ந்து தொகுதி வளர்ச்சிக்கு அயராது பாடுபடுவேன் என உறுதி கூறுகிறேன்.

அரசியலைத் தாண்டி திருவண்ணாமலை மாநகரில் தூய்மை அருணைச் சார்பில் நடைபெறும் தொண்டு தொடரும், கிரிவலப் பாதையிலும் தூய்மை அருணையின் தொண்டு தொடரும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், மதிமுக மாவட்ட செயலாளர் சீனி. கார்த்திகேயன், முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் முகமது அனிபா, மனிதநேய மக்கள் கட்சி நாசர் உசேன், தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு. ராஜாராஜம், தலித் விடுதலை இயக்கம் கிட்சா, நதியா, தொமுச., க.சௌந்தரராசன், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், பகுதி பொறுப்பாளர் சு.விஜி (எ) விஜயராஜ், அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், அமைப்புசாரா தொமுச. ஏ.ஏ.ஆறுமுகம், டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மண்டி ஆ. பிரகாஷ் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், நகர நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. – டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை, மே 19 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் ஆலோசனைக் கூட்டம் வண்ணார் பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க் அரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலைராஜா, மாவட்ட அவைத் தலைவர் முருகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.வி.சுரேஷ், கிரிஜா குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், மானூர் ஒன்றியச் செயலாளர்கள் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு கல்லூர் மாரியப்பன்,பகுதி கழக செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன், டாக்டர் சங்கர்,செய்யது முகைதீன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

பின்னர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

கேஸ் சிலிண்டர் கிடைப்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது.இதனால் சாதாரண சாமானிய மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.மக்கள் மிகப்பெரிய சிக்கலில் உள்ள நிலையில் பெட்ரோல் டீசல் விலையும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அடிப்படை பொருட்களின் விலைகளும் உயரும் அச்சம் உள்ளது.டாலருக்கு எதிராக உள்ள ரூபாய் மதிப்பும் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளான பொருளாதார சூழலை சந்தித்து வருகிறோம்.பொறுப்பு மிக்க பதவியில் இருக்கும் பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு மட்டுமே அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள், அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டக்கூடிய எந்த தகவலையும் அவர்கள் சொல்ல வில்லை.மக்களை பதட்டத்திற்கு உள்ளாக்கக்கூடிய மக்களுக்கு கட்டுப்பாடு விதிக்கக் கூடிய விஷயங்களை மட்டுமே தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய செயல்பாடுகளை அரசை பாதுகாக்க பொருளா தாரத்தை பாதுகாக்க வேண்டிய ஒரு அறிவிப்பையும் சொல்லவில்லை. அனைவரும் மனதி லும் எதிர்காலம் குறித்த கேள்வி குறியையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளது. புதிய அரசின் செயல்பாடு எப்படி உள்ளது என கேள்விக்கு இப்போதுதான் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார் கள் என பதில் அளித்தார்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் தெரிவித்தார்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே. அரங்கத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். துரை.கி.சரவணன், எம்.ஆர்.கே.பி.கதிரவன், அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், விஜயன்ராமகிருஷ்ணன், அ.பாரிபாலன், எம்.கே.சிவா, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.